Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

# Cultural Origin and Transgression in Women's Writing

**Dr. M. Padma Priya,** Assistant Professor of Tamil, PG& Research Department of Tamil,
S.F.R.College for Women, Sivakasi.
ORCiD: https://orcid.org/0000-0003-4419-6503
**DOI: 10.5281/zenodo.11192080**

## Abstract

*In Tamil Literature, It is only in the latter part of the twentieth century that women poets who wrote poetry expressed their feelings freely. Women's consciousness has been freed from the barriers of social culture. The number of female poets of the 21st century is more than the number of female poets belong to the ancient periods. These poems emphasize that there are two levels of feelings in the mind, male and female. It is normal for a woman to feel all the emotions that arise in a man. Why? How? These female poets have violated the prohibition of writing imposed by the male hegemony by raising questions about the prohibition of thoughts and feelings. All have revealed subtle differences in birth, upbringing, career, household and social activities. The decline of matriarchal leadership also reveals the dominance of patriarchy in Tamil society. To give voice for the female suppression and oppression, women emancipation is the way to get liberation. Indeed, women consciousness can be heard loudly in the poems of poets like Sugantisubramanian, Malathi, Salma, Kuttirevathy, Vijayapadma, Malathimaithri, Sugirtharani, Leenamanimegala, Kanimozhi and in minor Tamil poets. The originality of their poems support the modern ideas and principles seen universally. A group of Tamil feminist poets have created new codes for women liberation by themselves by pointing out that how Western feminism can trace its roots from Tamil Matriarchal culture.*

**Keywords**: Tamil literature, Women, Writing, Feminism.

## References

[1] Aranga Mallika. *Tamil Ilakiyamum Pen Mozhiyum*. New Century Bookhouse (B) Ltd, Chennai, 2002.
[2] Rayakaran, B. *Aan Atikkamum Samuga Odukkumuaigalum*. Keelai Kattru Veliyeetagam, Chennai, 2001.
[3] Kanimozhi. Agathinai. Kalachavadu Pathipagam, Nagercoil, 2003.
[4] Krishangini (Eds.). *Parathal Athan Suthandiram*. Kavya Publications, Chennai, 2001.
[5] Salma. *Oru Malaiyum Innooru Malaiyum*. Kalachavadu Pathipagam, Nagercoil, 2000.
[6] Salma. Patchaith Dhevathai. Kalachavadu Pathipagam, Nagercoil, 2003.
[7] Sarathambal, S. *Penniya Ulappagupaivum Pen Ezhuthum*. Ulaga Tamil Araichi Niruvanam, Chennai, 2005.
[8] Suganti Subramanian. *Meendezhuthalin nRagasiyam*. United Writers. Gopalapuram, Chennai, 2003.
[9] Natarasan, Su. *Tiranaivuk Kolgaigal*. New Century Bookhouse (B) Lit, Chennai, 1996.
[10] V. Nirmalarani. *Tamil Sirugathigalil Palina Verubadum Penadimaithnamum*. Kavya Publications, Chennai, 2003.
[11] Prema, R. *Penniyam*. Arivu Pathipagam, Chennai, 2007.
[12] Malathi. *Maramalligaigal*. Chanthini Pathipagam, Chennai, 2003.
[13] Malathi Maitri. *Shankaraparani*. Kalachavadu Pathipagam, Nagercoil, 2002.

**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

[14] Malathi Maitri. *Neerindri Amayathu Ulagu*. Kalachavadu Pathipagam, Nagercoil, 2003.
[15] Malathi Maitri. *Neeli*. Kalachavadu Pathipagam, Nagercoil, 2005.
[16] S. Muthuchithambaram. *Nattupuraviyal Pengal*. Muthu Pathipagam, Tirunelveli, 1998.
[17] Lena Manimekalai. *Otraiilaiyena*, Kanavupattarai Veliyeedu, Chennai, 2003.
[18] G. Vijaya Padma. Agathanimai. Kalachuvadu Pathipagam, Nagercoil, 2005.
[19] Vaikachelvi. *Ammi*. Kavya Veliyeedu, Chennai, 2002.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

# பெண்எழுத்தில் பண்பாட்டுக் கற்பிதங்களும் மீறலும்

**முனைவர் மா.பத்ம பிரியா,** உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை,

தி ஸ்டாண்டர்டு ஃபயர் ஒர்க்ஸ் இராஜரத்னம் மகளிர் கல்லூரி,சிவகாசி.

ORCiD: https://orcid.org/0000-0003-4419-6503

**DOI: 10.5281/zenodo.11192080**

**ஆய்வுச்சுருக்கம்**

*இருபதாம் நூற்றாண்டுப் பெண் கவிஞர்கள் தங்கள் உணர்வுகளைச் சுதந்திரமாக வெளிப்படுத்தியுள்ளனர். சமூகம், கலாச்சாரம் எனும் தடையிலிருந்து பெண்களின் உணர்வு விடுவிக்கப்பட்டுள்ளது. சங்க காலப் பெண் புலவர்களின் எண்ணிக்கையை விட இக்காலப் பெண்ணியக் கவிஞர்களின் எண்ணிக்கை அதிகமாகும். மானுட மனத்தில் எழும் உணர்வுகளில் ஆண், பெண் என்ற இரு நிலைகள் இருப்பதை இந்தக் கவிதைகள் வலியுறுத்துகின்றன. ஒரு ஆணுக்குள் எழும் அனைத்து உணர்ச்சிகளும் ஒரு பெண்ணுக்குள் எழுவது இயல்பானதாகும். ஆயினும் ஏன்? எதற்கு ? இந்தச் சமூகத் தடை. இக்கேள்விகளை எழுப்பி எழுத்துத் தடையை மீறியிருக்கிறார்கள் இந்தக் கவிஞர்கள். பெண்களின் பிறப்பு முதலாக வளர்ப்பு, தொழிற்தளம் போன்ற சமூக நடவடிக்கைகளில் ஆண் –பெண் என்ற நுட்பமான வேறுபாடுகள் கண்ணுக்குப் புலனாகாது தடைவிதிப்பதை கவிதைகள் வெளிப்படுத்தியுள்ளன. தாய்வழிச்சமூகத்தின் தலைமைத்துவத்தின் வீழ்ச்சியும் தந்தைவழிச்சமூகத்தின் ஆதிக்கமும் வெளிப்படுகின்றது. பெண்விடுதலை என்பது பெண் உணர்வின் விடுதலையாகும் என்று சுகந்திசுப்பிரமணியன், மாலதி, சல்மா, ஜி.விஜயபத்மா, மாலதிமைத்ரி,சுகிர்தாராணி, லீனாமணிமேகலை, கனிமொழி போன்ற கவிஞர்களின் கவிதைகள் உரத்து ஒலிக்கின்றது. ஏதோ ஒரு ஆதிக்கம் தங்களை காலில் தளையிடுவதாக பெருத்த சத்தத்துடன் வாசிப்பாளரின் காதுகளில் பெண்எழுத்துக்கள் குரலெழுப்புகின்றன. பெண்எழுத்துக்கள் பண்பாட்டை கட்டுடைத்துள்ளன.கவிதையின் பொருண்மை மேலைநாட்டிலிருந்து இறக்குமதியாகியுள்ள நவீனக்கோட்பாடுகளை, கொள்கைகளை ஆதரிக்கின்றன. சிற்சில கவிஞர்கள் மேலைநாட்டுப் பெண்ணியம் எப்படி இந்தியப் பண்பாட்டின் வேரினை அறியும் என்று கூறி பெண்விடுதலைக்குத் தாங்களே புதிய சாசனங்களை வடிவமைத்துள்ளனர்.*

**குறிப்புச்சொற்கள்**: தமிழ் இலக்கியம், பெண்கள், எழுத்து, பெண்ணியம்.

## முன்னுரை

சமுதாயத்தின் ஒரு குறிப்பிட்ட சூழலில் தான் மனிதர்கள் வாழ்கிறார்கள். இதனால் அவர்களின் படைப்புகள் அவ்வக்கால சமுதாயப் பின்புலத்தினைப் பதிவு செய்வது தவிர்க்கயிலாது நிகழ்கின்றது. நேரடியாகவோ மறைமுகமாகவோ இலக்கியத்தின் பாடுபொருள் சமுதாய மரபுகளைப் பிரதிபலிக்கின்றன. அவ்வகையில், குறிப்பிட்ட

**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

காலகட்டத்தில் தோன்றிய மகளிர் கவிதைகள் பெண்களின் அனுபவ உணர்வுகளைப் பெற்றுவருவதுடன் அக்காலக்கட்டத்தில் பண்பாடு திணித்துள்ள வாழ்வியல் மரபு விதிகளை வாதம் செய்து எடுத்துரைக்கின்றன. பெண்கவிஞர்களின் எழுத்துக்கள் பெண்களின் செயல்களுக்குத் தடைவிதித்துள்ள பண்பாட்டு தடைகளை எதிர்வாதம் செய்துள்ளன. மேலைநாட்டுப் பெண்ணியவாதிகளின் கருத்துக்கு ஆதரவு தெரிவித்தும் எதிர்ப்பு தெரிவித்தும் கவிதைகள் புனைந்துள்ளனர். தாய்மை, குழந்தை வளர்ப்பு, பூப்படைதல், காதல், திருமணம் என்ற பெண்களின் வாழ்வியல் நிலைகளை எதிர்வாதம் செய்வது மட்டுமின்றி மரபு வழிவந்த பண்பாட்டின் கற்பிதங்கள் அனைத்தும் மகளிருக்கு உண்டாக்கும் வாழ்வியற்சிக்கல்களையும் இக்கவிஞர்கள் வெளிப்படுத்தியுள்ளனர்.

**தாய்மை குறித்த வாதம் – எதிர்வாதம்**

பெண்ணின் வாழ்வியல் இலட்சியம் தாய்மைப் பேற்றில் தான் முடிவடைவதாக சமுதாயம் போதிக்கின்றது. சொல்லப் போனால் தாய்மை தான் வாழ்வின் ‘முழுமை’எனவும் பெண்களுக்கு நம்ப வைக்கப்பட்டுள்ளது. **“சமூக மயமாக்கும் பணியில் தாய் நிலமாக இருந்து உற்பத்திப் பணியைச் செய்கிறாள். ஏனெனில் ‘தாய்மையை’ (Motherhood) இந்தியப் பண்பாடு மதிப்புடையதாகப் புனிதம் நிறைந்ததாகக் கற்பித்திருக்கிறது.” (அரங்க மல்லிகா, ப.36)** இப்படிப்பட்ட தாய்மையுணர்வு மகளிர் கவிதைகளில் பின்வரும் பாடுபொருளைக் கொண்டுள்ளது.

1. **தாய்மைக்கானப் பெருமிதம்**
2. **தாய்மைக்கான வருத்தம்**

> **ஆண்களுக்கும் பெண்களுக்கும் இயற்கையில் வேறுபட்ட தன்மைகள் உள்ளன என்று சமூகம் வரையறுத்துள்ளது. இவ்வாறான மாறுபட்ட தன்மைகள் ஆண் - பெண் இருவரின் பிறப்பில் அமைந்த தன்மைகளா? அல்லது அவர்கள் வளர்க்கப்பட்ட வளர்ப்பு முறைகளினால் பெறப்பட்டவைகளா? என்ற கேள்விக்கு விடை இன்னும் ஆய்வுகளின் மூலம் நிறுவப்படாத நிலையிலேயே உள்ளது. (ச. முத்துச்சிதம்பரம், ப. 150)**

இவ்வாறான கேள்விக்கு விடை காணும் நோக்குடன் மகளிர் கவிதைகள்அமைந்துள்ளன. அவற்றொடு நின்று விடாமல் தடையாக உள்ள மரபுகளை மீறவும் வேண்டுகோள் விடுக்கின்றது. இங்கு தான் மரபுக்கும் பெண்களின் நடைமுறை வாழ்க்கைக்கும் முரண்பாடுகள் உண்டாகின்றது எனலாம். தாய்மை பற்றிய சமுதாய மதிப்பு கவிஞர்களால் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளன. இலக்கியம் சமூதாயத்தை மாற்றும் திறவுகோல் எனவே தான் **“இலக்கியம், சமுதாயம் இரண்டிற்கும் இடையேஉள்ள உறவுகள் ‘புலனறிவு’ (Senjory Perception) போல் மிக இயல்பானவை; எளிமையானவை; துலாம்பரமானவை" (தி. சு. நடராசன், ப.74)** என்கின்றனர். மேலும், டி. எஸ். எலியட் காலங்களின் மாறுதல்களுக்கு ஏற்பச் சமுதாய மதிப்புகள் மாறுகின்றன என்று கூறியுள்ளார் அதனையே பெண்எழுத்துக்கள்

புலப்படுத்தியுள்ளன. தாய்மைக்கானப் பெருமிதம் ஜி. விஜயபத்மா, மாலதிமைத்ரி, சுகிர்தராணி போன்றோரின் கவிதைகளில் மனநெகிழ்ச்சி, பெண்எழுச்சி உணர்வாக வெளிப்படுகின்றது. மேலைநாட்டுப் பெண்ணியவாதிகளில் ஒரு சிலர் குறிப்பிடுவது போன்று **"தாய்மை ஒரு பெண்ணுக்கு மகப்பேறு மகிழ்ச்சியை உண்டுபண்ணுகிறது." (செ. சாரதாம்பாள், ப.68)** என்ற கிறிஸ்துவாவின் கருத்தானது ஜி.விஜய பத்மாவின் கவிதையில் வெளிப்படுகிறது.

**வட்டக்குடுவையினுள்**
**தலைப்பிரட்டையாய்**
**அம்மாவினுள்**
**அடிவயிறு சாம்பல் மேடாய்**
**அடைகாக்கும்**
**அக்னியை**
**கருவறை சுகம்**
**வலிகளைத் தாண்டி**
**வடுக்களை**
**மறக்கடிக்க**
**பிளந்து புறப்படும்**
**உயிருக்காய் காத்திருக்கும்**
**உயிர் (ஜி. விஜய பத்மா, அகத்தனிமை, பக். 10 - 11)**

கர்ப்பகாலம், வடு, வலி, தாய்மை அனுபவம் என்ற தாய்மைபேற்றிற்கான பண்பாட்டுணர்வு மனநெகிழ்ச்சியாக அமைந்துள்ளது.

சுகிர்தராணியின் கவிதையில், ஆண்களால் முடியாத குழந்தைப்பேற்றுத் திறன் பெண்ணிடம் இருப்பதற்கு மனஎழுச்சி கொண்டுள்ளது.

**பலகோடி ஆண்டுகள்**
**கழித்தொரு பரிணாமத்தில்**
**உபயோகமற்று**
**உன்குறி மறைந்துபோகும்.**
**அக்கணத்தில் புரியும்**
**உன் சந்ததிகளுக்கு**
**என் யோனிகளின் வீரியம் (சுகிர்தராணி, இரவுமிருகம், ப. 60 )**

மேற்கண்ட கவிதையில் சுகிர்தராணி முன்வைக்கும் பண்பாட்டு எதிர்வாதம் பெண்ணின் மறுஉற்பத்தி திறனை கொண்டாடியுள்ளது. இதனையே மாலதிமைத்ரியின் பின்வரும் 'ஔவையிலிருந்து ஔவைவரை' என்ற கவிதையும் பிரதிபலித்துள்ளது.

**ஔவையின் மகள் நான்**
**பல காலங்களையும் வெளிகளையும்**

**பலவித உடல்களினூடாகக் கடந்து**
**சென்று கொண்டிருக்கும் ஒளவையின்**
**மகள் நான்**
**ஒளவையின் யோனி விரிந்து**
**இரண்டாயிரமாண்டு கால வெளியையும்…**
**…நிலவுக்குள்ளிருந்து என் முதல் ஒளவை**
**இன்றைக்கும் எனக்கு**
**கதை சொல்லிக் கொண்டிருக்கிறாள்**
**திசையெல்லாம்**
**ஒளவை மொழி வெளிச்சம் (மாலதிமைத்ரி, நீரின்றி அமையாது உலகு, ப.70 )**

மேற்கண்ட கவிதையில் மாலதிமைத்ரி தாய்மையைக் கொண்டாடுகிறார். 'குழந்தையின் உரிமை தாய்க்கு மட்டுமே என்பது இவரின் கருத்தாகும். இதனை 'தமிழ்நேயம்' என்ற பத்திரிகைக்கான நேர்ணலில் குறிப்பிட்டுள்ளார்.

> **குழந்தையை உங்களுடைய குழந்தையாகப் பாருங்கள். இந்த சமூகத்தின் உடமையாகவோ ஆணின் உடமையாகவோ பார்க்காதீர்கள். தாய்மை உணர்வையும் தாய்-சேய் உறவுக்கான உணர்வு நிலையையும் நான் கொண்டாடுகிறேன். சமூகத்தில் நிலவுகிற மதிப்பீட்டு அடிப்படையிலான தாய்-சேய் உறவை நான் கவிதைக்குள் கொண்டு வரவில்லை. தாய்மை என்ற கருத்தியலை கொண்டாடுகிறேன். மணிமேகலையின் தாய்மை அமுதசுரபி மூலம் எல்லோருக்கும் உணவளித்தது வள்ளலாரிடமிருந்த தாய்மை 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்'என்று வெளிப்படுகின்றது மணிமேகலை, வள்ளலார் இவர்களிடமிருந்த தாய்மை உணர்வு ஆணுக்கும் வரவேண்டும். (Caring mind) பெண்களுக்கு இயற்கையாகவே உள்ளது. அதைத்தான் தாய்மை என்கிறோம். ஆணுக்கு அந்த உணர்வு இல்லை. அதனால்தான் சமூகத்தில் வன்முறைகள் அதிகமாகிக் கொண்டே போகின்றன. (மாலதிமைத்ரி, ப. 107)**

இவ்வாறான தாய்மை ஆதரவுக் கருத்துக்கள் இவரது உரையில் இடம்பெறுகின்றன. இவை தான் இன்றைய பெண்ணியவாதிகள் இனப்பெருக்கத்திறனை முன்வைத்து நடத்தும் பெண்ணியப் போராட்டம் ஆகும்.

**தாய்மைக்கான வருத்தம்**

பெண்குழந்தையின் பிறப்பில் காணப்படும் பாலின வேறுபாடும் தாய்மைப்பேற்றில் இழக்கப்படும் பெண் உடல் அடையாளமும் தாய்மைப்பேற்றிற்கான வருத்தமாக மகளிர் கவிதைகள் பதிவுசெய்துள்ளன.

> **தாய்மை தான் எல்லா மனித உறவுகளுக்கும் மையமாக விளங்குகிறது என்பது மட்டுமல்ல எல்லா தளங்களிலும் பெண்ணை ஆண்மேலாண்மை புரிவதற்கு அடித்தளம்**

Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 1, SPL 1, April 2024** **E-ISSN – 2584-167X**

> **அமைத்துக் கொடுக்கக் கூடிய ஓர் அரசியல் நிறுவனமாகவும் விளங்குகிறது. (Adrienne Rich, p. 216)**

என்ற அட்டரெய்னேரிச்சின் கருத்தாகும். சுகந்திசுப்பிரமணியன், சல்மா கவிதைகள் இதனை பதிவுசெய்துள்ளன.

**இன்னும் பிறக்காத**
**உனக்கு**
**என் முத்தங்கள்.**
**கால்நீட்டி**
**உடல்முறித்து**
**என் வயிற்றுள்**
**உன் பரபரப்பைக் காட்டுகிறாய்.**
**வெளி உலகம்**
**பூவும் புல்வெளியும்**
**ரத்தமும்,முட்களுமாய். (சுகந்திசுப்பிரமணியன், மீண்டெழுதலின் ரகசியம், ப.24)**

மேற்கண்ட சுகந்திசுப்பிரமணியன் கவிதையானது இன்று வரைநிலவி வரும் பெண்பிறப்பிற்கான வெறுப்புணர்வைக் (மரபுணர்வு) குறிப்பிட்டுள்ளது. இதற்குக் காரணம் இச்சமுதாயம் பெண்குழந்தைக்குச் செய்யும் இடையூறு தான் என்று பாரதிகண்ணம்மா கவிதையும் பின்வருமாறு உரைக்கின்றது.

**வயிற்றுக்குள்ளிருந்து துள்ளாதெ பிள்ளையே!**
**என் வாழ்க்கைச் சூலில் உன்னை வரவேற்கத்**
**தைரியமில்லை எனக்கு**
**கட்டியவளை கண்ணியமாய் நடத்தாதே**
**காளைக்கு அழகல்ல!**
**பெண்ணைச் சரியாக நடத்தாதே**
**சரித்துப்போடு - அவளை**
**அறிவாளியாக அனுமதிக்காதே!**
**அவமதித்து அடக்கு**
**கடைசியில் அவளை அடக்கியாள்வதற்கு**
**'வயிற்றை நிரப்பு 'என்ற**
**நீயிப்போளட்டுமாதச் சுமையாய்**
**என் வயிற்றில்.**
**நீ ஆணாய் பிறப்பதிலும் மகிழ்ச்சியில்லை,**
**பெண்ணாகப் பிறந்து விடுவாயோ என்று பயமாயிருக்கு**
**நான்படும் அவஸ்தைகள்**

Volume 1, SPL 1, April 2024 E-ISSN – 2584-167X

**தலைமுறைக்கும் போதும் நீ வேறு**

**பெண்ணாகவா. (பாரதிகண்ணம்மா, பறத்தல் அதன் சுதந்திரம், ப.148 )**

இக்கவிதையில் சோக இழையோடிள்ளதை அறியலாம். இவரைப் பற்றிய குறிப்பு அக்கவிஞருக்கு நிகழ்ந்த குடும்ப வன்முறையை நமக்குச் சான்று பகர்கின்றது. **"இயற்பெயர் செலின்மெரி 1961ல் பிறந்த இவர். 7-1-1994ல் கணவரால் கொடுமைப்படுத்தப்பட்டு கொல்லப்பட்டார்." (க்ருஷாங்கினி ப. 148)** பெண்குழந்தையை தாய் வெறுப்பதற்கான பின்புலம் இதன் மூலம் வெளிப்படுகின்றது.

கவிஞர் சல்மா தாய்மையை முதல் தோல்வி என்கிறார். இக்கருத்து சுலாமித் ஃபயர் ஸ்டோன் என்ற பெண்ணியலாரின் தாய்மைக்கான கருத்தொடு பொருந்தியுள்ளது.

> **பெண்கள் தங்கள் உடல்கூற்றின் அமைப்பினாலேயே ஒருவிதத்தில் ஊனப்படுத்தப்பட்டவர்கள். ஏனெனில் அவர்கள் மட்டுமே தாய்மை அடைந்து பிள்ளைப்பேற்றின் சகல கஷ்டங்களையும் அனுபவிக்க வேண்டியுள்ளது. எனவே பெண்களைப் பொறுத்த வரை, தாய்மை என்பது காட்டுமிராண்டித்தனமானது (Pregnancy is Barbaricy) (இரா. பிரேமா, ப. 83)**

இக்கூற்றின் வெளிப்பாடாக சல்மாவின் கவிதை அமைந்துள்ளது.

**இரவுகளில்**
**பழகிய நிர்வாணத்திற்கிடையில்**
**அதிருப்தியுற்றுத் தேடுகிறாய்**
**என் அழகின் களங்கமின்மையை**
**பெருத்த உடலும்**
**பிரசவக் கோடுகள் நிரம்பிய வயிறும்**
**ரொம்பவும் தான் அருவருப்பூட்டுவதாய்ச்**
**சொல்கிறாய்**
**என் உடலைப் போலல்ல**
**உன்னுடையது**
**பறைசாற்றிக் கொள்வதில்**
**உன்னிடம் தடயங்களில்லை என்பதால்**
**நீ பெருமை கொள்ளலாம்**
**நான் என்ன செய்ய,**
**என் நசிவைப் போலத்தான்**
**இந்த பிரசவக் கோடுகளும்**
**எளிதில் செப்பனிட முடிவதில்லை**
**உன்னிலிருந்து தானே தொடங்கிற்று**

**எனது தோல்வியின் முதலாவது நிலை (சல்மா, ஒரு மாலையும் இன்னொரு மாலையும், பக். 72- 73 )**

குழந்தைப் பேற்றின் பின்னிரவுகளில் கணவன் - மனைவி பாலுறவில் நிகழும் விரிசலின் வெளிப்பாடாக இதனை அறியலாம். கவிஞர் தாய்மைக்கான உடல் அடையாளத்தை இயற்கை செய்த நசிவாக குறிப்பிட்டுள்ளார். தாய்மைக்குப் பின்னாக பெண்ணுக்கு ஏற்படும் ‘பாலுறவுச் சிக்கல்’ கவிதையில் வெளிப்பட்டுள்ளது.

**அம்மா குறியீட்டுக் கற்பிதம்**

தாய் - மகள் உறவுநிலையை கனிமொழி,வைகைச் செல்வி, மாலதிமைத்ரி, லீனாமணிமேகலை போன்றோர் கவிதைகள் பதிவு செய்துள்ளன. ‘அம்மி’ என்னும் கவிதையில் வைகைச் செல்வி மரபின் படிமமாக அம்மாவைப் பிரதிபலிக்கின்றார்.

**வேகமாய்த் திரும்புகையில்**
**இன்றும் காலில் இடறிற்று**
**கருங்கல் அம்மி.**
**அம்மா வீட்டில் இது**
**சும்மாவா இருந்தது,**
**அம்மா அரைக்கையிலே**
**ஆத்துக்கு அக்கரையில்**
**அழகருக்கும் வாயூறும்**
**வீடெல்லாம் மணந்தது**
**அம்மாவின் வாசனையில்… (வைகைச் செல்வி, அம்மி, பக். 98-99)**

அம்மா என்னும் உறவின் குறியீடாக அம்மி பதிவுசெய்யப்பட்டுள்ளது. புழங்குபொருள் பண்பாட்டு வழி தாய்மை போற்றுதல் வெளிப்பட்டுள்ளது.

**நெற்றி நிறைய பொட்டு வைத்து**
**மங்களகரமாய்**
**வளைய வரும் அம்மா**
**மெல்லிய குரலில்**
**ஸ்லோகம் சொல்லும் அம்மா**
**மெட்டி ஒலிக்க**
**மஞ்சள் மணமாய் வளைய வரும் அம்மா**
**என் அம்மாவைப் பற்றி**
**எந்தக் கதைகளும் சொல்லுவதே இல்லை (கனிமொழி, அகத்திணை, பக். 26 - 27)**

மேற்கண்ட ‘அவள்’ கவிதையானது மங்களஅடையாளமாக அம்மாவைப் பார்க்கின்றது. குங்குமம், மெட்டி அணிந்த சமயப்பற்றுக் கொண்ட மரபுசார்ந்த பிம்பமாக படைத்துக் காட்டியுள்ளது. **"திருமணம் என்ற அமைப்பிற்குள் (வந்தபின்) அவளின் பங்களிப்பு**

**அல்லது கடமைகள், குடும்ப அமைப்பு, சொத்து முறைகள், உறவு போன்ற இவை எல்லாம் (வழிவழியாக வந்த) மரபு, சட்டம் ஆகியனவற்றால் ஆளப்படுகின்றன. குடும்பத்திற்குள்ளேயே அவளின் பாலின வெறுபாடு (Sen Discrimination) காரணமாக பணி வேறுபடுகின்றன" (Rekhadevi Raju, P. 24)** என்ற கருத்து நிறுவப்பட்டுள்ளது. இதுவே வைகைச் செல்வி, கனிமொழி கவிதைகளில் வெளிப்படுகின்றது.

**அம்மா பிம்பம் கட்டுடைத்தல்**

மாலதியின் கவிதை சற்று வேபடுகின்றது. முன்னைய கவிஞர்களின் கருத்துக்கு மாறுபாடான 'அம்மா' குறித்த பிம்பம் வெளிப்படுகின்றது.

**சமுதாய சௌகர்ய**
**சந்தர்ப்ப வாதங்களில் ஒன்று**
**தாய்மை போற்றுவதும்**
**கூர்மை உன் தகட்டில்**
**பெண்ணை அறையும்**
**பொன் ஆணிகளில் பெரியது**
**தாய்மை போற்றுதல்**
**என் தகவல் டாட்காம்**
**வீட்டின் முதல் எபழுத்தாளர்**
**டெய்லர் மருத்துவரை**
**என் தாய் வேறு. ( மாலதி, மரமல்லிகைகள், பக்.48-50 )**

வீட்டுக்குள் முடக்கப்படும் தாயை விடுத்து,அரசியல், விளையாட்டு,பொது அறிவு,கல்வி, தொழில்கல்வி போன்றவற்றில் பிரகாசிக்கும் இலட்சியத் தாயை இனம் காணுகின்றார். லீனாமணிமேகலை தனது தாயை பிரபஞ்சத்தின் தோற்றுவாயாகக் குறிப்பிடுகின்றார்.

**உன்**
**தொங்கிய முலைகளின்**
**மடித்த இருளிலிருந்து**
**தொடங்குகிறது என் பிரபஞ்சம்… (லீனாமணிமேகலை, ஒற்றையிலையென, ப. 42 )**

மாலதி மைத்ரியின் கவிதை உயிர்களின் உருவாக்கம் பெண்ணால் என வியக்கின்றது.

**அம்மாவின் அழவயிற்றுக் கோடுகள்**
**குஞ்சு நண்டின் தடங்களைத் தரித்த**
**மேல் வயிறு**
**இது என்ன அதிசயம்**
**இந்த உலகத்தையே**
**உன் பாட்டிக்குப் பாட்டிதான் பெத்தாள்**

**கோழி முட்டை இடுவதைப்போல (மாலதிமைத்ரி, நீலி, ப. 28)**

அம்மா என்பவள் மரபார்ந்த படிமமாக, மரபு மீறிய சாதனைப்பெண்ணாக,உயிரினை பெருக்கும் மறுஉற்பத்தி திறனாளியாக உயர்வுபடுத்தப்பட்டுள்ளாள்.

**பூப்படைதல் - எதிர் வாதம்**

பெண்களின் உடல் தாய்மையடைவதற்குரிய பக்குவ நிலையினை அடைதல் தான் பூபடைதல் ஆகும். பெண்களை பூப்புற்றிந்த காலத்திலும், குழந்தை பெற்ற காலத்திலும் தூய்மையற்றவர்களாகக் கருதி விலக்கி வைக்கும் நிலை அனைத்துப் பிரிபு மக்களிடமும் இருந்துள்ளது. பெண்கள் பூப்புற்றிருக்கும் காலங்களில் வீட்டுப் பண்டங்களைத் தொடாமல் ஒதுங்கி வாழ்ந்தமையால் அவர்கள் ‘கலந்தொடா மகளிர்’எனப்பட்டனர்.

**சங்க காலத்தின் இறுதியில் முதல் மாதவிடாய் மற்றும் குழந்தை பிறப்புக்குப் பின் 30-40 நாட்கள் தனிமைப்படுத்தி வைப்பது நடந்துள்ளது. இது 'புனிறு’என்று அழைக்கப்பட்டுள்ளது. கிணறு, சமையல் அறை,சாமியறை, கோயில் என புனிதமான இடத்திற்குச் சாமத்தியப்பட்ட குழந்தை செல்லமுடியாது. (பி. இரயாகரன், ப. 59)**

என்ற வரலாற்றுக் குறிப்பு பெண்ணுக்கான கட்டுப்பாட்டை உணர்த்துகின்றது. மேலும், பெண்களை தனியிடத்துக்கு அழைத்துச் சென்று குடிலமைத்து தங்கச் செய்து துணையாக வயது முதிர்ந்த மகளிரைப் பாதுகாப்புக்கு அமர்த்தியுள்ளனர். இந்த மரபார்ந்த பழக்கம் இன்றும் சிற்சில இடங்களில் நிகழ்வது குறித்து கவிதை பதிவுசெய்துள்ளது.

**…‘என்ன பாப்பா’**
**‘இப்பத்தான் தனியா படுக்கிறாள்**
**மாசா மாசம் பழகிடும் ‘என்றாள் ஆயா’**
**இருளிள் கரைந்து கொண்டிருக்கிறது**
**பஞ்சபூத உடல் (மாலதிமைத்ரி, சங்கராபரணி, ப. 33 )**

மாலதிமைத்ரியின் ‘தெய்வ உடல்’ என்னும் இக்கவிதை முதல் முறையாகப் பருவமடைந்த பெண்ணின் தனிமையைக் கூறுகின்றது. சுகந்தி சுப்பிரமணியனின் பின் வரும் கவிதையும் இத்தகைய பதிவு தான்.

**பெண்ணேஉனக்கென்று**
**தனியிடம் உருவானது இங்கே**
**நீ புதிதாய் வயதுக்கு வந்ததற்கு,**
**குறைந்தபட்சம் ஒரு குட்டிழப் பிச்சைக்காரி**
**ஆகி விடுகிறாய்**
**நிவாரணமில்லாத வயிற்றுவலி எப்போதும் (சுகந்தி சுப்பிரமணியன், மீண்டெழுதலின் ரகசியம், ப.10)**

சல்மாவின் கவிதையும் மாதவிடாய் பெண்தனிமை என்று வேதனைப் பதிவுகளைத் தான் வெளிப்படுத்துகின்றது.

Academic Research News
*Peer-Reviewed Journal*

Volume 1, SPL 1, April 2024 E-ISSN – 2584-167X

**‘முற்றிலுமாகத்**
**தன் அடையாளமிழந்து**
**நொறுங்கிக்கிடக்கிறது**
**முதல் தீட்டில் பயந்திருந்த**
**என்னோடிருந்த**
**கழிப்பறைச் சுவரும் கூடச்**
**சரிந்து கிடக்கிறது(சல்மா, பச்சைத்தேவதை, ப. 50 )**

கி.பி. முதல் நூற்றாண்டில் இந்தியா வந்த பிளினி ( கி.பி. 23-79 ) என்னும் மேல்நாட்டு பயணி பருவமடைந்தப் பெண்களின் அவலநிலை குறித்துப் பதிவு செய்துள்ளார்.

**மாதவிலக்குக் கொண்ட பெண் ஒருத்தி இனிய பழந்தரும் மரத்தின் அடியில் நின்றால் அம்மரத்தின் பழத்தினுடைய இனிப்பு கொடிய கசப்பாக மாறிவிடும். அவள் தானியத்தைத் தொட்டால் அத்தானியம் விதைப்பதற்கு உதவாது அவை முளைக்கும் சக்தியை இழந்துவிடும், வளரும் பூச்செடியருகில் சென்றால் அவை சுருங்கி வாடிவதங்கி விடுகின்றன. தோட்டத்துப் பசுந்தன்மை மாறிவிடுகிறது. ஒரு மரத்தினடியில் அவள் உட்கார்ந்தாள் என்றால் அம்மரத்திலிருந்து பழங்கள் பழுக்காததற்கு முன் தாமாகவே அழுகி கீழே விழுந்து விடுகின்றன. அவளுடைய பார்வை பட்டு முகம் பார்க்கும் கண்ணாடியை அழுக்குப் படிந்த கண்ணாடியே போல் ஆக்கிவிடுகிறது. (வி.எஸ்வி. இராகவன், ப.155)**

இக்குறிப்பு பெண் அடக்குமுறைச் சுட்டுகின்றது. வருகின்றன.

பெண் பூப்படைதல் அவளின் திருமணத்திற்கு காரணமாகின்றது. பெண் உடல் திருமணத்திற்கு தயார்படுத்தப்படுதலே அடுத்தநிலையாக கற்பிக்கப்படுகின்றது.

**பெண் பூப்பு அடைந்தவுடன் அவளது விருப்பு வெறுப்பு பொருட் படுத்தப்படாமல் அவளை ஒருவனிடம் ஒப்படைப்பது பெரிய கடமையாகக் கருதப்படுகிறது. இப்படிப்பட்ட சமூகம் ஆண் வயது வந்தவுடன் அவனைக் குறித்து இவ்வாறு கருதுவதில்லை. (வீ. நிர்மலாராணி. ப.101)**

பெண் ஆணிலிருந்து வேறுபட்டு அறியப்படுவது அவளின் உடல் மாற்றத்தால் தான். அதனால் அந்த வேபாட்டினை பெண்ணிய எழுதுக்கள் கேள்விக்குள்ளாக்கியுள்ளன.

**கருவறை இருளுள்**
**தனது ஒற்றைக்கால் கடுக்க நிற்கிறாள்**
**அர்த்தநாரீஸ்வரி**
**யோனியில் பிசுபிசுக்க**
**கசகசப்பில் நெளியும் சக்தியை**
**தனது ஒற்றை வலக்கண்ணால்**
**முறைக்கிறான் சிவன்**

**தன் உடலைச் சற்று ஆசவாசப்படுத்த**
**சிவனை விலகிப்போகச் சொல்கிறாள்**
**சரிபாதியானவன் நிலை குலைகிறான்**
**என் கால்களை நீட்டி நான் அமர வேண்டும்**
**என் உடலுடன் நான் உறங்க வேண்டும்**
**இடது கரத்தால் சிவனைப் பிய்த்தெறிந்து விட்டு**
**தனது பழைய பீடத்தின் வெற்றிடத்தில்**
**வந்தமர்கிறாள்**
**பிரகாரச் சுற்றுப்பாதை எங்கும்**
**ஒற்றைக் காலடியின்**
**இரத்தத்தடங்கள் (மாலதிமைத்ரி, நீலி, பக். 66- 67 )**

அர்த்தநாரி தொன்மம் வழி பூப்படைந்த பெண்ணின் மனநிலை பதிவுசெய்யப்பட்டுள்ளது. பெண்ணின் உடல் உபாதைகள் ஆண்களால் கண்டுகொள்ளப் படுவதில்லை என்ற வேதனை கூறப்பட்டுள்ளது.

**முடிவுரை**

பெண்கள் பண்பாட்டு இயங்குதளத்தில் சிக்குண்டு உழல்வதை பெண்எழுத்துக்கள் பதிவுசெய்துள்ளன. குடும்பம் என்னும் நிறுவனம் ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுவேறான சட்டங்களைக் கொண்டுள்ளன. பெண்ணின் தாய்மை, பூப்படைதல் ஆகியன அடக்குமுறைக்கு உள்ளாவதையும், தாய்மைப்பேற்றிற்குப் பின் வரும் உடல்நசிவு பற்றிய பெண்ணிய சிந்தனைகளையும் அறியலாம். கவிஞர்கள் மரபு பற்றிய வாதங்களுக்கு எதிர்வாதம் செய்து கவிதை புனைந்துள்ளனர். பண்பாட்டுக் கற்பிதங்களைத் தகர்த்தெறியும் பெண்ணியச்சிந்தனை மரபு மீறலாக தடைதாண்டிப் பயணித்துள்ளது.

**துணைநூற்பட்டியல்**

[1] அரங்க மல்லிகா. *தமிழ் இலக்கியமும் பெண்மொழியும்.* நியூசெஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட், சென்னை, 2002.
[2] இரயாகரன், பி. *ஆணாதிக்கமும் சமூக ஒடுக்குமுறைகளும்.* கீழைக் காற்று வெயீட்டகம், சென்னை, 2001.
[3] கனிமொழி. *அகத்திணை*, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2003.
[4] கிருஷாங்கினி (தொ.ஆ). *பறத்தல் அதன் சுதந்திரம்.* காவ்யா வெளியீடு, சென்னை, 2001.
[5] சல்மா. *ஒரு மாலையும் இன்னொரு மாலையும்.* காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2000.
[6] சல்மா. *பச்சைத் தேவதை.* காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2003.
[7] சாரதாம்பாள், செ. *பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண்ணெழுத்தும்.* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2005.

[8] சுகந்தி சுப்பிரமணியன். *மீண்டெழுதலின் ரகசியம்.* யுனைடெட் ரைட்டர்ஸ். கோபாலபுரம், சென்னை, 2003.

[9] நடராசன், சு. *திறனாய்வுக் கொள்கைகள்.* நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிட்,சென்னை, 1996.

[10] வீ. நிர்மலாராணி. *தமிழ்ச்சிறுகதைகளில் பாலினவேறுபாடும் பெண்ணடிமைத்தனமும்.* காவ்யா வெளியீடு, சென்னை, 2003.

[11] இரா. பிரேமா. *பெண்ணியம்.* அறிவுப் பதிப்பகம், சென்னை, 2007.

[12] மாலதி. *மரமல்லிகைகள்.* சாந்தினி பதிப்பகம், சென்னை, 2003.

[13] மாலதி மைத்ரி. *சங்கராபரணி.* காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2002.

[14] மாலதி மைத்ரி. *நீரின்றி அமையாது உலகு.* காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2003.

[15] மாலதி மைத்ரி. *நீலி.* காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2005.

[16] ச. முத்துச்சிதம்பரம். *நாட்டுப்புறவியல் பெண்கள்.* முத்துப் பதிப்பகம், திருநெல்வேலி, 1998.

[17] லீனா மணிமேகலை. *ஒற்றையிலையென* , கனவுப்பட்டறை வெளியீடு, சென்னை, 2003.

[18] ஜி. விஜய பத்மா. *அகத்தனிமை.* காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2005.

[19] வைகைச்செல்வி. அம்மி. காவ்யா வெளியீடு, சென்னை, 2002.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி**: இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் **Creative Commons Attribution4.0** கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.